1982 மார்ச் 9]

உள்ளது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஓய்வு பெற்றாலும் பத்தாயிரம் ரூபாய் கிடைக்க இந்தப் பரிசீலனையின் இறுதியில் முடிவு இருக்குமா? இதவும் அந்தப் பரிசீலனையோடு இணைத்துப் பார்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்பொழுது தான் பரிசீலனையே நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். பரிசீலனைக்கு முன்னால் திட்ட வட்டமான அறிவிப்பையே நம்முடைய உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அப்படி ஒரு அறிவிப்பைக் கொடுத்துவிட்டால் பரிசீலனையே தேவையில்லை. பரிசீலித்து முடிவெடுக்கலாம்.

சென்னை இராயபுரம் தொகுதியிலுள்ள லெவல்கிராஸிங்

*வினா எண். 430 திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள இராபின்சன் பூங்காவுக்கும் அரசினர் ஸ்டான்லி மருந்துவமனைக்கும் இடையில் உள்ள லெவல்கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனைக்களைய அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள இராபின்சன் பூங்காவுக்கும் அரசினர் ஸ்டான்லி மருத்துவமனைக்கும் இடையில் உள்ள லெவல்கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அகற்ற மேற்குறிப்பிட்ட இடத்தில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை கட்ட திட்டமிடப்பட்டு சென்னை மாநகராட்சியின் ஆய்வில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறை அமைச்சருக்குப்பக்கத்திலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு திரு காளிமுத்து அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்தபோது இதே மாதிரி தான் சொன்னார். 2, 2½ ஆண்டுகள் போய்விட்டன. இது ரொம்ப முக்கியமான பிரச்சனை வியாபாரிகள், அலுவலகத்திற்குச் செல்பவர்கள், மற்றவர்கள் எல்லாம்கூட ரொம்ப அவதிக்குள்ளாகிறார்கள். அது மட்டும் அல்ல, இந்த லெவல் கிராஸிங்குக்கு வடக்குப் பக்கத்திலே ஆர். எஸ். ஆர். எம். ஆஸ்பிட்டல் இருக்கிறது—மாண்புமிகு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அமைச்சர் ஹண்டே அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—தெற்கு பக்கத்திலே ஸ்டான்லி ஆஸ்பிட்டல் இருக்கிறது. இந்த இரண்டு மருத்துவ மனைகளுக்கும் போகின்ற அவசர நோயாளிகள் லெவல் கிராசிங் அடிக்கடி மூடப்படுவதால் ரொம்ப அவதிக் குள்ளாகிறார்கள். ஆகவே. மற்ற திட்டங்கள் மாதிரி, அன்டர் கன்சிடரேஷன், அன்டர் கன்சிடரேஷன் என்று இல்லாமல், துரிதமான நடவடிக்கைகள் மூலமாக, அதை உடனடியாக நிறைவேற்ற அரசும் அமைச்சரும் ஆவன செய்வாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பதிரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்விலே இருப்பதற்குக் காரணமே ரெயில்வே இலாகாதான். ரெயில்வே இலாகாவினுடைய அனுமதி இல்லாமல் நாம் இந்தச் சுரங்கப்பாதையை, அதுவும் தண்டவாளத்திற்குக் கீழே போடமுடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம். ஆகவே தான் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அவர்கள் அனுமதி கிடைக்கவில்லை. அதற்குரிய வடிவமைப்பு, வரைப்படம், மதிப்பீடு இவைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு ரூ. 1 கோடியே 30 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, ரெயில்வேயிலே டிலே ஆகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சருக்கு அடிக்கடி டெல்லிக்கு செல்லக்கூடிய வாய்ப்பு கிடைக்கக்கூடும். அதுபோன்ற வாய்ப்புகள் வருகின்றபொழுது, சம்பந்தப் பட்ட இலாகாவோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு, உட னடியாக நிறைவேற்றச் செய்யவேண்டும். இதற்குக் காரணம், கோஷ்டி சண்டையிலே கால் வெட்டப்பட்ட 18 வயது சிறுவன் ரிக்ஷாவிலே எடுத்துச் செல்லப்படுகிறான்; இரவு நேரம். அந்த நேரத்திலே அந்த லெவல் கிராசிங் மூடப்பட்டிருக்கிறது. எடுத் துச் சென்ற ரிக்ஷாக்காரன் பொறுப்பற்ற முறையில் அந்தப் பையனை அங்கேயே போட்டுவிட்டுப் போகிறான். கால் மட்டும் வெட்டப்பட்டு இருக்கிறது, ஆனால், ஹெவி பிளீடிங்..,,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் ஹண்டே இடத்திலே சொல்ல வேண்டியதை, அமைச்சர் குழந்தை வேலுவிடம் சொல்கிறீர்கள். கேள்வி நேரத்தை, வரலாற்று நேரம் ஆக்கக் கூடாது, கேள்வியை முறையாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆகவே அமைச்சரே நேரடி யாக, பெர்சனல் இன்ட்டரஸ்ட் எடுத்து—திரு. காளிமுத்து டிலே செய்து விட்டார். அது மாதிரி செய்யாமல்—விரைவாக முடிக்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கதவு மூடப்படுகின்ற நேரத்தில் எல்லாம் இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் எல்லோருக்கும் வருவது வழக்கம், இயற்கை. இது போன்ற நிலைகளை எல்லாம் தவிர்ப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ரெயில்வே இலாகாவில் இதுபோன்ற பிரச்சினைகள் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்றன. காரணம், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகக் கூட எங்கெங்கே லெவல் கிராசிங் வருகிறதோ, அங்கே எல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டும், அல்லது அடிமட்டப் பாலம் கட்ட வேண்டும் என்றெல்லாம் கேட்டால் உடனடியாக உத்திரவு கொடுப்பதில்லை. ஆகவேதான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.

ஊராட்சிகளுக்கு சலுகைவிலையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 431—திரு. இ. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகளைச் சலுகை விலையில் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், 1981–82 ஆம் ஆண்டில் எத்தனை ஊராட்சிகளுக்கு அப்பெட்டிகள் அளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சிகளுக்கு ரூபாய் 1,000 மானியமாக வழங்கி 50 டி.வி. செட்டுகளை ஊராட்சிகளுக்கு அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் பல பஞ்சாயத்துக்களில் பணம் இருந்தும் பஞ்சாயத்துத் தீர்மானம் போட்டும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்குத் தடை இருப்பதாக அறிகிறேன். தடையைத் தவிர்த்து, தொலைக்காட்சி எங்கெங்கே வேலை செய்யுமோ, அங்கெல்லாம், சென்னையிலே இருந்து 125 கிலோ மீட்டர் வரையில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS